# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 20.02.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அல்லாஹ்வுடைய வீரர் ஆவார். அல்லாஹ்வே அவர்களை **ஜரியுல்லாஹ்** (அல்லாஹ்வின் வீரர்) என்று கூறியுள்ளான். அல்லாஹ் அவர்களை அழைத்ததற்கிணங்க சிறு வயதிலிருந்தே அவர்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாம் மீது பேரன்பைப் பொங்கிப் பீறிடச் செய்தான். இஸ்லாத்தைப் பாதுகாக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் கைநழுவவிட்டதில்லை.

எல்லா மார்க்கங்களைப் பற்றியும் அன்னாருக்கு ஆழ்ந்த அறிவு இருந்தது. ஒவ்வொரு மார்க்கத்திற்கும் எதிராக இஸ்லாத்தின் சிறப்புத் தன்மையை நிரூபித்துக் காட்டுவதில் மூழ்கியிருந்தார்கள். இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் நிறுவனருக்கு எதிராக அக்காலத்தில் நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டன. எண்ணற்ற பிரசுரங்கள் வெளியிட்டார்கள்.

முஸ்லிம்கள் இந்த எதிர்ப்புகளுக்கு பதில் சொல்வதற்குப் பதிலாக தமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் குஃப்ர் ஃபத்வா கொடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது இஸ்லாத்திற்கு ஏற்பட்ட அந்த நெருக்கடியான சூழ்நிலையில் மார்க்கத்தின் மீது உண்மையான கவலை கொண்ட ஒரே மனிதர் – இஸ்லாத்தைப் பாதுகாக்க விரும்பியவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் மட்டும்தான்.

அப்போது அன்னார் அந்த அனைத்து தாக்குதல்களையும் முறியடிப்பதற்காக பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதினார்கள். இறைவசனமாகிய திருக்குர்ஆன் எல்லா வகையிலும் முழுமையான நூல் என்று அதில் எடுத்துரைத்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத் மற்றும் அன்னாரின் சிறப்புத் தகுதியை ஒப்புமையில்லாத சான்றுகள் மூலம் நிரூபித்தார்கள்.

இஸ்லாத்திற்கு எதிராக நின்ற எல்லா மார்க்கங்களையும் அன்னாரின் இந்த சான்றுகள் அசைத்து விட்டன. அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக இழிவான தாக்குதல்கள் தொடுப்பதில் இன்னும் தீவிரமாக இறங்கினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் புதிய கோணத்தில் இஸ்லாத்தின் அழகை வெளிப்படுத்திக் காட்டியது கண்டு இஸ்லாமிய உலமாக்கள் சிலர் மிக்க கண்ணியத்துடன் பார்க்கவும் செய்தனர். ஆனால் பிரசுரங்கள் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இஸ்லாத்திற்குப் பெருமை சேர்ப்பதைக் கண்டு முஸ்லிம்களிலும் ஒரு பிரிவு அவர்களுக்கு எதிராக திரும்பியது. அன்னியர்களுடன் சேர்ந்து எதிர்க்கத் தொடங்கினர்.

அன்னார் அக்காலத்தில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எந்த அளவுக்கு வேகத்துடன் உலகில் எடுத்து வைத்தார்கள் எனில் அதனை கீழ்க்கண்ட செய்திகளிலிருந்து மதிப்பிடலாம். ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் சனோரி என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபியின் கூற்றை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அறிவிக்கிறார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் 20,000 பிரசுரங்கள் வரை அச்சிட்டு வெளியிட்டார்கள். உலகின் பல்வேறு இடங்களுக்கு தபால்கள் செல்லத்தக்க இடங்கள் அனைத்துக்கும், அரசர்கள், ஆட்சியாளர்கள், அமைச்சர்கள், பெரிய சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், உலமாக்கள், நவாப்களுக்கு எல்லாம் பிரசுரங்களை அனுப்பி வைத்தார்கள்.

இது மஸீஹிய்யத் என்ற அவர்களின் வாதம் வைக்கப்படாத காலத்தில் நடந்ததாகும். இஸ்லாத்தின் பெருமையை அப்பிரசுரங்கள் மூலம் அப்போதே வெளியிட்டார்கள். இந்த தூதுச் செய்தி முழு உலகிலும்

பரவியபோது உலகிலும் ஒரு உத்வேகம் எழுந்தது. ஆனால் இந்தியாவிலுள்ள மற்ற மதத்தினர் இஸ்லாத்தை தமக்குள் நெருக்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களிடம் பேரதிர்ச்சி ஏற்பட்டது. இஸ்லாத்திற்கு ஆதரவாக நூல்களும் எழுதப்பட்டன. இப்போது நேரடியாக இஸ்லாத்தின் மகத்துவத்தை நிலைநாட்டும் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன. எனவே முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக என்னென்ன தாக்குதல் செய்ய முடியுமோ செய்தனர். சில முஸ்லிம்களும் கூட தமது காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அதற்கு ஆமாம் போடவும் செய்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக திரும்பினர்.

இந்நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் மிக வேதனையுடன் துஆ கேட்டார்கள். நான் உ னது கடைசியான, முழுமையான மார்க்கம் மற்றும் உனது அன்பிற்குரிய காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களுக்கு ஆதாரவாகவே இவை அனைத்துப் பணிகளையும் செய்கின்றேன். அல்லாஹ்வே! எனக்கு உதவி செய்வாயாக.

பிறகு அன்னார் மிகவும் சிந்தித்து ஒரு முடிவு செய்தார்கள். 40 நாள் வரை தனித்திருந்து அல்லாஹ்விடம் பிரத்யேகமாக வேண்ட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அதன் மூலம் இறைவனிடம் இஸ்லாத்தின் உண்மைக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஆதரவாக ஒரு சிறப்பான அடையாளம் கேட்க நினைத்தார்கள். அதற்காக முதலில் அன்னார் இஸ்திகாரா செய்தார்கள். அவர்கள் 40 நாள் தனித்திருந்து துஆ செய்யும் அவ்விடத்திற்காகவும் இஸ்திகாரா செய்தார்கள். அப்போது அவர்களுக்கு ஹோஷியார்பூரில் அதனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் ஹோஷியார்பூருக்கு பயணம் செய்ய முடிவு செய்தார்கள். அப்போது அவர்களுடன் மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் அப்துல்லாஹ் சனோரி சாஹிப், ஹாபிஸ் அஹ்மத் அலி சாஹிப், மூன்றாவதாக பதேஹ் கான் சாஹிப் ஹோஷியார்பூரிலிருந்து மெஹர் அலி கானுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடிதம் எழுதினார்கள். நான் இரண்டு மாதங்கள் தங்கியிருக்கும் எண்ணத்தில் அங்கு வருகிறேன். எனக்காக ஒரு தனி வீட்டை ஏற்பாடு செய்யுங்கள். தனித்திருந்து அல்லாஹ்வை நான் வணங்குவதற்காக எனக்கு அதை செய்யுங்கள். மேலும் தம்முடன் கூட இருந்தவர்களிடம் கூறினார்கள். இக்காலகட்டத்தில் நான் யாரையும் சந்திக்கமாட்டேன். பிறகு நகரத்துக்கு வெளியில் அவர்களுக்கு ஓர் இடத்தை ஏற்பாடு செய்து தந்தார்கள். 22 ஜனவரி 1886 அன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு சென்றார்கள். இன்னொரு இடத்தில் சென்று உட்கார அவர்கள் முடிவு செய்து தனது நண்பர்களிடமும் கூறி விட்டார்கள். என்னை யாரும் சந்திக்க வேண்டாம். உங்களில் யாரும் கூட என்னுடன் அக்காலத்தில் பேச வேண்டாம். சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்தால் எனது அறையின் வாசலில் வைத்து விட்டால் போதும் நான் எடுத்துக் கொள்வேன்.

இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் பல கஷ்ஃபுகளை வழங்கினான். 20 பிப்ரவரி 1886 ஆம் ஆண்டு அங்கு ஹோஷியார்பூரில் இருந்தவாறே ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். பல்வேறு இடங்களுக்கு அனுப்பினார்கள். அதில் பல முன்னறிவிப்புகள் இருந்தன. அல்லாஹ் அவற்றை மிகவும் தெளிவான முறையில் நிறவேற்றியும் வைத்தான். ஆனால் ஜமாஅத்தில் 20 பிப்ரவரி அன்று ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. எனவே நானும் அந்த அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த முன்னறிவிப்பு எத்துனை உன்னதமாக நிறைவேறியது என்று எடுத்துக் கூறுவேன். இன்றும் தற்செயலாக பிப்ரவரி 20 ஆம் தேதியாகும். இந்த முன்னறிவிப்பில் தமது ஒரு மகன் பற்றியும் கூறியிருந்தார்கள். ஹோஷியார்பூரில் செய்த அம்முன்னறிவிப்புகள் அடங்கிய பிரசுரத்தை அவர்கள் வெளியிட்டதில் அவர்கள் அல்லாஹ்விடம் இஸ்லாத்தின் உண்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாக ஓர் அடையாளத்தை அல்லாஹ்விடத்தில் வேண்டியதும் தெரிய வருகிறது.

இந்த முன்னறிவிப்பு ஒரு சாதாரண முன்னறிவிப்பு அல்ல. இந்த முன்னறிவிப்பை நிறைவேற்றியவரும் இஸ்லாத்தின் மகத்துவத்தை நிரூபிக்கும் ஓர் அடையாளமாக விளங்கினார்.

அல்லாஹ்வுடைய இன்னொரு தக்தீரும் இதோடு நிகழ்ந்தது. அது என்னவெனில், அதே வருடம் பைஅத் வாங்குமாறு கட்டளையும் அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. 1889 -ல் பைஅத் வாங்கும் கட்டளையை நிறைவேற்றியதோடு அதே ஆண்டு முஸ்லிஹ் மவ்வூது ஆகிய அதே வாக்களிக்கப்பட்ட மகனும் பிறந்தார். பிறகு அந்த முன்னறிவிப்பின் வாசகத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொற்களிலேயே எடுத்து வைக்கிறேன்.

அவர்களின் பிரசுரத்தில் கூறியுள்ளார்கள்:

முதல் முன்னறிவிப்பு இந்த எளியனைப் பற்றியதாகும். இன்று 1886 பிப்ரவரி 20 ஆம் தேதி ஜமாத்துல் அவ்வல் 15 அன்று இந்த அறிவிப்பு செய்யப்படுகிறது.

முதலில் எல்லா வல்லமைகள் உள்ளவனும், கம்பீரமானவனும், ரஹீமும், கரீமும் ஆகிய அந்த அல்லாஹ், எல்லாவற்றின் மீது ஆற்றல் உள்ளவன் எனக்கு அறிவித்தான்.

நான் உனக்கு நீ கேட்டதற்கிணங்க ஒரு ரஹ்மத்தின் அடையாளம் தருகிறேன். நான் உனது வேண்டுதல்களை கேட்டேன். உனது வேண்டுதல்களுக்கு ஏற்புடைமையின் தகுதியை வழங்கினேன். உனது (ஹோஷியார்பூர்) பயணத்தை உனக்கு அருளுக்குரியதாக்கினேன். உனக்கு இறை நெருக்கம் மற்றும் ரஹ்மத்தின் அடையாளம் தரப்படுகிறது. அருள் மற்றும் கருணையின் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றியின் சாவி உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றியாளரே, உமக்கு ஸலாம். இறைவனே உம்மிடம் இதை கூறுகிறான். மரணத்தின் பிடியில் இருந்ம மக்களுக்கு வாழ்வளிப்பதற்காகவும், மண்ணறையில் அடைபட்டுக் கிடப்போர் எழுந்து வரவும், இஸ்லாத்தின் உண்மை வெளிப்படவும், சத்தியம் தனது எல்லா வளங்களுடன் வரவும், பொய் தனது எல்லா அசுத்தங்களுடன் ஓடி விடுவதற்காகவும், நான் எல்லா ஆற்றல்களும் வாய்ந்தவன் என்று மக்கள் அறிந்து கொள்ளவும், நான் விரும்பியதை செய்யக் கூடியவன் என்று புரிந்து கொள்ளவும், நான் உன்னுடன் இருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்தவும், இறை இருப்பை நம்பாதவர்கள், அல்லாஹ், அவனது வேதம், அவனது தூய ரஸுல் முஹம்மது (ஸல்) அவர்களை இழிவான கண் கொண்டு பார்ப்பவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைக்கவும், குற்றவாளிகளின் வழி தெளிவாக்கப்படவும் அல்லாஹ் இதனை தருகிறான்.

உமக்கு நற்செய்தி! ஓர் அழகிய தூய மகன் உனக்கு தரப்படும். ஓர் வனப்புமிக்க சிறுவன் கிடைப்பான். அவன் உனது சந்ததியிலிருந்து வருவான். ஓர் அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வரவிருக்கிறார். அவர் பெயர் இம்மானு வல் பஷீரும் ஆகும். அவருக்கு தூய ஆவி வழங்கப்பட்டுள்ளது. அவர் அசுத்தங்களிலிருந்து தூயவர். அவர் நூருல்லாஹ். வாழ்த்துக்கள். அவர் வானத்திலிருந்து வருகிறார். அவருடன் அருள் இருக்கும். அது அவர் வரும்போது கூடவே வரும். அவர் செல்வமும் மகத்துவமுமிக்கவர். அவர் உலகில் வருவார். தனது மஸீஹின் நஃப்ஸ் மற்றும் ரூஹுல் ஹக் உடைய பரக்கத் கொண்டு அதிகமான நோயாளிகளை குணப்படுத்துவார். அவர் கலிமத்துல்லாஹ் ஆவார்கள். இறைவனது ரஹ்மத்தும் ரோ–மும் அவரை அனுப்பியுள்ளது. மிக நுட்ப ஞானம் மற்றும் புரிதிறன் உள்ளவராகவும் உள்ளத்தால் மென்மையானவராகவும் விளங்குவார். வெளிப்படையான மறைவான அறிவுகளால் நிரப்பப்படுவார். மூன்றை நான்காக்குவார். (இதன் பொருள் தெரியவில்லை என்று எழுதியுள்ளார்கள்.)

அல்லாஹ் விண்ணிலிருந்து இறங்குவது போன்று அவரது வருகை இருக்கும். அவரது வருகை மிகவும் அருளுக்குரியதும் கம்பீரத்தை வெளிப்படுத்தவும் காரணமாக இருக்கும். ஒளி வருகிறது. இறைவன் தனது திருப்தி என்னும் நறுமணத்தால் பூசுவான். இறைவனது நிழல் அவரது தலை மீது இருக்கும். அவர் மிக வேகமாக வளருவார். கைதிகள் விடுதலையாக காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை பிரபல்யமடைவார். சமுதாயம் அவரிடமிருந்து வளம் பெறும். அதன் பிறகே அவரது உயிர் விண்ணின்பால் எடுத்துக் கொள்ளப்படும். **வகான அம்ரன் மக்ளியா** – இது தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். இதில் 52

பண்புகள் சொல்லப்பட்டுள்ளன. வேறு இடங்களில் சில முன்னறிவிப்புக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவித்து 59 point -களாக குறிப்பிட்டும் இருக்கிறார்கள்.

இதுவே அந்த மகத்தான முன்னறிவிப்பு ஆகும். இது நிறைவேறுவதை குறித்து அல்லாஹ்விடம் செய்தியைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவித்தார்கள்.

9 வருடம் முடிவதற்குள் இந்த பையன் பிறப்பான். இதனை விபரமாக விவரித்தால் இன்னும் நீண்டு விடும். எனவே சுருக்கமாக கூறுகிறேன். அவர்கள் பிரசுரம் அச்சடித்து வெளியிட்ட சில காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அஸ்மத் என்பது அவள் பெயர். அப்போது எதிரிகள் மிகவும் கூச்சலிட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்பு தவறானது என்று நிரூபித்து விட்டதாக கூறினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் சில காலம் குறிப்பிட்டுள்ளேன். உடனே குழந்தை பிறந்து விடும் என்று கூறவில்லை.

பிறகு சிறிது காலம் கழித்து ஒரு மகன் பிறந்தார். அவருக்கு பஷீர் என்று பெயர் வைக்கப்பட்டது. இவரை பஷீர் அவ்வல் (முதலாவது பஷீர்) என்று அழைக்கப்படுகிறது. சில காலம் கழித்து சிறு வயதிலேயே இவர் இறந்து விட்டார். எதிரிகள் உடனே மீண்டும் கூச்சலிட்டனர். ஆனால் இந்த இரு குழந்தைகள் பிறக்கும் முன்பே அவர்கள் செய்த முன்னறிவிப்பை பண்டிட் லேக்ராம் மிகவும் கடினமான வார்த்தைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பின் ஒவ்வொரு வார்த்தைக்கு எதிராகவும் அதனை மறுத்து தான் ஒரு முன்னறிவிப்பை வெளியிட்டான். உதாரணமாக, 'உனக்கு தூய மகன் பிறப்பார். அவர் உனது சந்ததியிலிருந்து தோன்றுவார்.' இதற்கு எதிராக லேக்ராம் இவ்வாறு எழுதினான். இறைவன் எனக்கும்தான் கூறியுள்ளான். உங்களது தலைமுறை மிக விரைவில் துண்டிக்கப்பட்டு விடும். உமது தலைமுறை அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் இருக்கும். மேலும் ஒரு குழந்தை பிறக்கும். அப்படியே பிறந்தாலும் அது ரஹ்மத்தின் அடையாளமாக இருக்காது. துக்கத்தின், முஸீபத்தின் அடையாளமாக இருக்கும். நவூதுபில்லாஹ்.

இன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறியது மட்டுமல்லாமல் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வாக்களித்தபடி உனது சந்ததிகளில் உன்னிடமிருந்து பரவும் என்பதற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பௌதீக சந்ததிகளும் அல்லாஹ்வின் அருளால் உலகில் பரவியுள்ளனர்.

ஆனால் லேக்ராமின் சந்ததிகள் இருக்கின்றார்களா? இல்லையா என்றே யாருக்கும் தெரியாது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆன்மீக சந்ததிகளோ உலகம் முழுவதும் பரவியுள்ளனர். எல்லா நாடுகளிலும் ஒளிமிக்க நட்சத்திரம்போன்று மின்னிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே பஷீர் அவ்வல் இறந்ததும் எதிரிகள் மகிழ்ச்சியுடன் முரசு கொட்டினர். லேக்ராமின் முன்னறிவிப்பு கேட்டு இன்னும் பூரிப்படைந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு காலவரையறை கூறியுள்ளான். அதுவரை எதிர்பார்த்திருங்கள். இது நீண்ட காலம் என்று நீங்கள் கூறுவீர்கள் எனில் ஒருவர் அவ்வளவு காலம், தான் இருப்பேன் என்று தான் என்ன உத்திரவாதம் தர முடியும்?

பிறகு முன்னறிவிப்பு மகன் பிறப்பதைப் பற்றி வருகிறது. மகன் பிறக்கும். அல்லது மகள் பிறக்கும் என்றும் யாரும் உத்திரவாதம் தர முடியாது. நான் சொன்னபடி நடக்கும் வரை நான் உயிருடன்தான் இருப்பேன் என்று யாரும் உத்திரவாதம் அளிக்க முடியாது. லேக்ராமும் முன்னறிவிப்பு செய்தான். எல்லாம் வார்த்தைகள் தானே? நாமும் செய்வோம் என்று நினைத்துதான் செய்தான்.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

முன்னறிவிப்பு நிறைவேறும்போது உலகம் தானாகவே அறிந்து கொள்ளும். இதனை அறிவித்த நான் நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து வந்தவன் என்பது விளங்கும்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னென்ன சிறப்பு பண்புகளுடன் மகனுக்கு முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளதோ அந்த நீண்ட கால அவகாசம் முடிய சில நாட்களே எஞ்சியிருப்பினும் அவனது முன்னறிவிப்பிற்கு எந்த பங்கமும் ஏற்படாது. தூய நேர்மையான மனிதன் ஒப்புக் கொள்வான். இத்தகைய உயரிய தகுதி உடைய முன்னறிவிப்பை ஒரு சாதாரண மனிதர் செய்வது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

எனவே, வெறுமே ஒரு பையனைப் பற்றி மட்டும் கூறவில்லை. மாறாக, இக்காலத்திற்குள் பிறப்பார். வாழ்நாளை பெறுவார். இஸ்லாத்திற்கு தொண்டு செய்வார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரில் உலகில் பரப்புவார். பிறகு முழு உலகமும் பிரபல்யமடைவார். எவ்வாறிருப்பினும் இஸ்லாத்தின் எதிரிகளிடமிருந்து பல்வேறு ஆட்சேபனைகள் வந்து கொண்டேயிருந்தன. 9 ஆண்டு காலத்திற்குள் பெரும் ஆட்சேபனைகள் கிளப்பப்பட்டன என்று நான் கூறினேன். பஷீர் அவ்வல் இறந்ததும் எதிரிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். பஷீர் அவ்வல் வஃபாத் பற்றி குறிப்பிட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எதிரிகளின் இரண்டாவது குற்றச்சாட்டு ஏப்ரல் 1886-ல் தரப்பட்ட முன்னறிவிப்பின்படி பிறந்த மகன் பிறந்தவுடன் இறந்து விட்டான். அதன் விரிவான பதிலை இதில் நான் விளக்கிவுள்ளேன். சுருக்கமான பதில் என்னவெனில் இன்றுவரை எந்த பிரசுரத்திலும் நாம் இந்த (இறந்து போன) சிறுவர்தான் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்வார் என்று குறிப்பிட்டு இருந்ததில்லை. அல்லது இந்தப் பையன் தான் முஸ்லிஹ் மவ்வூது என்று கூறவும் இல்லை. ஆனால் 20 பிப்ரவரி 1886 -ல் வெளியிட்ட பிரசுரத்தில் எனது சில குழந்தைகளைப் பற்றிய முன்னறிவிப்பு உள்ளது. பஷீர் அவ்வல் சிறு வயதில் இறந்து விடுவார் என்பதும் அதில் உள்ளது. எனவே எனது முன்னறிவிப்பு நிறைவேறியுள்ளதா அல்லது பொய்யாகி உள்ளதா என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த சிறுவனின் மரணத்தைப் பற்றி குறிப்பிடுகின்ற முன்னறிவிப்புகள் தெளிவாக வந்துள்ளன. இந்த வகையில் பிப்ரவரி 20 ஆம் தேதி வெளியிட்டுள்ள முன்னறிவிப்பிலும் ஓர் அழகிய தூய சிறுவன் உனது விருந்தாளி வருகிறார் என்று வந்துள்ளது.

விருந்தாளி என்ற சொல் குறைந்த வயதைக் கொண்ட விரைவில் மரணிக்கக் கூடிய ஒரு மகனைப் பற்றி சான்று பகர்கிறது. ஏனெனில் சில நாட்கள் இருந்து விட்டு செல்பவரே விருந்தாளியாவார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே விடைபெற்று சென்றுவிடக் கூடியவர். விடைபெற்றுச் செல்பவரிடத்தில் ஒருவர் வருகிறார் எனில் அவர் விருந்தாளியாகமாட்டார். குறிப்பிடப்பட்ட அந்த பிரசுரத்தில் அவர் பாவங்களிலிருந்து முற்றிலும் தூய்மையானவர் என்பதும் அவரது குறைந்த வாழ்நாளைக் குறிப்பிடுகின்றது. எனவே ஒருவர் தடுமாறத் தேவையில்லை. முஸ்லிஹ் மவ்வூது பற்றி வந்த முன்னறிவிப்பு அதற்கு அடுத்து வருகிறது. அதற்கு முன்னுள்ள அனைத்து வார்த்தைகளும் வஃபாத் ஆகக் கூடியவருக்காக சொல்லப்பட்டவை. முஸ்லிஹ் மவ்வூதைப் பற்றி குறிப்பிடும் முன்னறிவிப்புகள் கீழ்க்கண்ட சொல்லில் இருந்து ஆரம்பமாகின்றன. அவருடன் ஃபஸ்ல் (அருள்) இருக்கும். அது அவர் வரும்போது கூடவே வரும். அதற்கு முன்னுள்ள முன்னறிவிப்பின் மூன்று, நான்கு வரிகள் பஷீர் அவ்வல் பற்றியவை.

எனவே, முஸ்லிஹ் மவ்வூது உடைய பெயர் இல்ஹாமிய சொற்களில் ஃபஸ்ல் என்று வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு இரண்டாவது பெயர் மஹ்மூது. மூன்றாவது பெயர் இரண்டாவது பஷீர். அவரைப் பற்றி இன்னொரு இல்ஹாமில் ஃபஸ்லே உமர் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஒருவர் பிறந்து சிறிது காலம் இருந்து மரணித்துப் போவதும் முன்னறிவிப்பின்படி நிகழ வேண்டியது அவசியமாக இருந்தது. இவை அனைத்தையும் இறை ஞானத்தின் அடிப்படையில் நடந்தவையாகும். பஷீர் அவ்வல் இறந்து விட்டார்கள். பஷீரே ஸானி (இரண்டாவது பஷீர்) க்கு இன்னென்ன பண்புகள் இருக்கும் என்று வந்தது. இவ்விருவரைப் பற்றியும் ஒரே முன்னறிவிப்பில் ஒரே இடத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 12 ஜனவரி 1889-ல் பிறந்த அவருக்கு பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் என்று பெயர் வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஸிர்ருல் குலாபா என்ற தனது நூலில் கூறுகிறார்கள். எனது ஒரு சிறு வயது மகன் பஷீர் அவ்வலுக்கு வஃபாத்தை தந்துள்ளான். அவர் வஃபாத் ஆகும் போது இறைவன் எனக்கு அறிவித்தான். இறைவன் மீண்டும் கருணையுடன் அவரை திரும்ப அனுப்பி வைப்பான். அதன்படியே அக்குழந்தையின் தாயார் ஒரு கனவும் கண்டார். அதில் பஷீர் வந்து விட்டார். நான் உம்மை அன்புடன் இணைக்கப் போகிறேன். விரைவில் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன் என்று தாயாரைப் பார்த்து கூறுகிறார். இந்த இல்ஹாம் மற்றும் கனவுகளுக்குப் பிறகு அல்லாஹ் எனக்கு ஒரு மகனை வழங்கினான். அவரே அந்த வாக்களிக்கப்பட்ட மகன். எனவே நான் எனது அந்த மகனுடைய பெயரையும் பஷீர் என்றே வைத்தேன். இவரும் அந்த முதல் பஷீரின் தோற்றத்திலேயே காணப்படுகிறார்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த மகத்தான மகன் பற்றிய முன்னறிவிப்பு இரண்டாவது பஷீராகிய இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் மூலம் உன்னதமான முறையில் நிறைவேறியது. இதனை உலகமே கண்டுள்ளது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு அந்த மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களே கலீஃபாவானார்கள். அல்லாஹ்வின் அருளால் 52 வருடம் அவர்களது கிலாஃபத் இருந்தது. ஜமாஅத் அவர்கள் காலத்தில் இந்தியாவுக்கு வெளியில் எந்த அளவுக்கு பரவியதோ அதுவுமே அந்த முன்னறிவிப்பின் உண்மைக்கு பெரும் ஆதாரமாகும்.

அவர்களது கிலாஃபத் காலத்தை ஆய்வு செய்வது மிகவும் சாத்தியமற்றது. அவர்களைப் பற்றிய சில சிறப்பான முன்னறிவிப்புகள் நிறைவேறியுள்ளதைப் பற்றி சில சம்பவங்கள் கூறுவேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது வாயால் கூறியதையும் அன்னாரைப் பற்றி மற்றவர்கள் கூறியதையும் விளக்குவேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாமே முஸ்லிஹ் மவ்வூது என்று அல்லாஹ்வே அவர்களுக்கு கூறிய பிறகே அறிவித்தார்கள். அல்லாஹ்விடமிருந்து அந்த அறிவிப்பு 1944-ல் வந்தது. பிறகு நானே மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவித்த முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவித்தார்கள். எந்த முஸ்லிஹ் மவ்வூது மூலம் இஸ்லாம் உலகின் மூலை முடுக்குகள் வரை சென்றடையும் தவ்ஹீத் உலகில் நிலைபெறும் என்று கூறப்பட்டதோ அந்த முஸ்லிஹ் மவ்வூது நானேயாவான்.

இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதற்கு ஜமாஅத்திற்கு வெளியிலுள்ளவர்கள் தந்த சாட்சியை முதலில் தருகிறேன். அஹ்மதியல்லாத ஓர் ஆலிம் கண்ணியத்திற்குரியவர் மவ்லவி சமிவுல்லாஹ் கான் பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் இஸ்ஹாரே ஹக் என்ற பத்திரிகையில் எழுதுகிறார்கள். அன்னாருக்கு – அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் கிடைக்கிறது. உனது சந்ததியிலிருந்தே உனது ஜமாஅத்தை நான் நிலைநாட்டுவேன். அவரை எனது நெருக்கத்தின் நறுமணத்தால் தடவுவேன். அவர் மூலம் உண்மை வளர்ச்சியடையும். அவர் மூலம் அநேகர் இந்த உண்மையை ஏற்பர். இந்த முன்னறிவிப்பை படியுங்கள். மீண்டும் மீண்டும் படியுங்கள். பிறகு ஈமானுடன் கூறுங்கள். இந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லையா? இந்த முன்னறிவிப்பு செய்யும்போது இந்த தற்போதைய கலீஃபா (அதாவது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள்) சிறு குழந்தையாக இருந்தார். இவரைத்தான் கலீஃபா ஆக்க வேண்டும் என்று மிர்ஸா சாஹிப் தரப்பிலிருந்த எந்த மரண சாசனமும் சொல்லப்படவுமில்லை. மாறாக, கிலாஃபத் தேர்வுக் குழுவின் கருத்துக்கு விடப்பட்டது. பெரும்பாலார் ஹகீம் நூருத்தீன் சாஹிபை கலீஃபாவாக ஏற்றுக் கொண்டனர். பலர் அதனை கேலியும் செய்தனர். ஆனால் ஹகீம் சாஹிப் வஃபாத் ஆனதும் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டது ஆச்சர்யமானது. கலீஃபா நூருத்தீன் சாஹிப் உடைய காலத்தில் சிறப்பான எந்த வளர்ச்சியை ஜமாஅத் பெறவில்லை. ஆனால் இந்த மிர்ஸா சாஹிப் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்) உடைய காலத்தில் கடும் வளர்ச்சியடைய அவரது ஜமாஅத் பெற்றுள்ளது. எனவே நிலைமைகள் புரிய வைக்கின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில் கணிசமான வளர்ச்சியை ஜமாஅத் பெற்றுள்ளது. இது 1900 களில் இதனை கூறியுள்ளார். இப்போது வளர்ச்சி இரு மடங்காகி உள்ளது.

இவை ஜமாஅத்திற்கு வெளியில் உள்ளவர்களின் கருத்தாகும். அந்த உலமாக்கள் கொஞ்சத்திற்கு கொஞ்சமாவது உண்மையை உணர்ந்திருந்தனர். இன்றைய காலத்தின் உலமாக்களைப் போன்று முற்றிலும் அறியாதவர்களாக அக்கால உலமாக்கள் இருந்ததில்லை.

சுருக்கமாக, அவர்களுடைய சந்ததியில் இருந்தே ஜமாஅத் நிலைநாட்டப்பட்டது. ஜமாஅத்திற்கு வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டது. இது மிர்ஸா சாஹிபின் முன்னறிவிப்பு நிறைவேறியிருப்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. பிறகு முஸ்லிமல்லாத ஹர்ஜன் சிங் என்பவர் ஒரு பத்திரிகை ஆசிரியர் ஆவார். அவர் எழுதுகிறார்:

மிர்ஸா சாஹிப் 1901-ல் ஹஸ்ரத் மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் சாஹிப் ஆகிய தற்போதைய கலீஃபா குழந்தையாக இருக்கும்போது முன்னறிவிப்பு செய்தார். அதனை ஒரு கவிதையில் மிர்ஸா சாஹிப் குறிப்பிடுகிறார்.

உனது ஒரு மகன் ஒருநாள் எனது அன்பிற்குரியவராக மாறுவார். எல்லா இருள்களையும் அவரிடமிருந்து நான் அகற்றுவேன். ஓர் உலகத்தையே மாற்றிக் காட்டுவேன் என்று எனக்கு நற்செய்தி தந்தாய்.

**பஷரத் தீ கே ஏக் பேட்டா ஹே தேரா**
**ஜோ ஹோகா ஏக்தின் மஹ்பூப் மேரா**
**கருன்கா தூர் உஸ் ம ஸே அந்தேரோ**
**திக்காவுன்கா கே எக் ஆலம் கேஃபிரா**

மிர்ஸா சாஹிபுடைய இந்த வார்த்தைகள் நிச்சயமாக ஆச்சர்யமானவை. 1901-ல் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் பெரிய ஆலிமோ பாஸிலோ இல்லை. அல்லது மிர்ஸா சாஹிபிற்கு பெரிய அரசியல் பின்னணி எதுவும் இருக்கவும் இல்லை. அந்த நேரத்தில் ஒருவர் கூறுகிறார். எனது ஒரு மகன் இவ்வாறு ஆவார் என்று கூறுவது நிச்சயமாக அவரது ஆன்மீக ஆற்றலுக்குரிய சான்றாகும். மிர்ஸா சாஹிப் ஒரு வாதம் செய்து விட்டு சென்றுள்ளார். எனவே எனது மகன் தலையிலேயே எனக்குப் பிறகு எனது ஜமாஅத்தின் பொறுப்பு வரும் என்று அவர்கள் யூகித்திருந்தால் அதில் ஆச்சர்யம் என்ன இருக்க முடியும் என்று ஒருவர் கேட்கலாம். ஆனால் அவரது அக்கருத்து தவறாகும்.

ஏனெனில் மிர்ஸா சாஹிபுடைய குடும்பத்திலிருந்து தான் கிலாஃபத் வர வேண்டும் என்று எந்த நிபந்தனையும் அவர் வைக்கவில்லை. அந்த வகையில் தான் முதல் கலீஃபத்துல் மஸீஹ் வந்தார்கள். அவர்களுக்கு பௌதீகமான முறையில் மிர்ஸா சாஹிப் குடும்பத்துடன் எந்த தொடர்பும் இருந்ததில்லை. எனவே ஹகீம் நூருத்தீன் சாஹிபிற்குப் பிறகு இன்னொருவர் கலீஃபாவாக வருவது முற்றிலும் சாத்தியமான ஒன்றாகவே இருந்தது. மவ்லவி முஹம்மது அலி சாஹிப் லாஹூர் போன்றவர்கள் அதனால்தான் கிலாஃபத் தமக்கு கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கவும் செய்தனர். ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் சாஹிபிற்கு ஆதரவாக பெரும்பான்மை மக்கள் இருந்ததால் அன்னார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அந்த அஹ்மதியல்லாத பெரியவர் எழுதுகிறார்:

மிர்ஸா சாஹிப் இடத்தில் ஓர் ஆன்மீக ஆற்றல் இல்லையெனில் தனது மகனுக்கு இவ்வளவு பிரபல்யம் கிடைக்கும் என்பதை எப்படி அறிய முடியும்? மேலும் மிர்ஸா சாஹிப் அறிவிக்கும்போது அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தனர். மூவருக்காகவும் துஆ செய்து கொண்டும் இருந்தார்கள். ஆனால் இந்த குறிப்பிட்ட முன்னறிவிப்பு ஒருவரைப் பற்றிதான். பிறகு அம்மனிதர் வந்தார். ஓர் உலகத்தையே மாற்றிக் காட்டினார்.

பிறகு முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பில் உள்ள இன்னொரு செய்தி. அவர் அல்லாஹ்வுடைய கலிமா மற்றும் இஸ்லாத்தை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்காக வருவார் என்று வந்துள்ளது.

இவ்விஷயத்திலும் மற்றவர்களின் சாட்சியம் எவ்வாறு இருக்கிறது என்று பாருங்கள்.

ஸமீன்தார் என்ற பத்திரிகையில் மவ்லவி சஃபர் அலி கான் சாஹிப் எழுதுகிறார்:

இவர் பிரபல முஸ்லிம் தலைவர் ஆவார். காதுகளை நன்றாக திறந்து கேளுங்கள். மிர்ஸா மஹ்மூதுக்கு எதிராக கியாமத் வரை உங்களால் வெற்றி பெற இயலாது. மிர்ஸா மஹ்மூதிடம் குர்ஆனும், குர்ஆனின் அறிவும் உள்ளது. உங்களிடம் என்ன இருக்கிறது? நீங்கள் கனவிலும் குர்ஆன் படித்ததில்லை. மிர்ஸா மஹ்மூதிடம் ஒரு ஜமாஅத் உள்ளது. செல்வத்தையும் உள்ளத்தையும் உயிரையும் அவரது காலடியில் அர்ப்பணிக்க அது தயாராக உள்ளது. மிர்ஸா மஹ்மூத் இடம் கொள்கைபரப்புநர்கள் பல்வேறு மொழி அறிஞர்கள் உள்ளனர். முழு உலகிலும் அவர்கள் தமது கொடியை நிலைநாட்டியுள்ளனர்.

பிறகு அவர்கள் உறுதிவாய்ந்தவராகவும், உலகியல் மார்க்க ஞானத்தால் நிரப்பப்பட்டவராகவும் இருப்பார் என்ற முன்னறிவிப்பு பற்றியும் மற்றவர்கள் சாட்சியம் கூறியுள்ளனர். இதில் பிரபலமானவர் காஜா ஹஸன் நியாமி டெல்லியைச் சார்ந்தவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பற்றி எழுதுகிறார்: பெரும்பாலும் அவர் நோயுற்றே இருப்பார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சிறு வயதிலிருந்தே நோயுற்றே இருந்தார்கள். தாமே அதுபற்றி குறிப்பிட்டும் இருக்கிறார்கள். சிறு வயதிலேயே கண் பார்வை குறைவு. சரியாக படிக்க முடியாது. எனது ஆசிரியர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் என்னைக் குறித்து குறிப்பிடுபவர், ஒருமுறை மீர் நாஸிர் நவாப் கான் சாஹிப் என்ற ஆசிரியர் முறையிட்டார்கள். இவருக்கு படிக்க முடியவில்லை. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்னகைத்தார்கள். அவரிடம் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களிடம்) சிரமமான எந்த வேலையும் செய்யச்சொல்ல வேண்டாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் இவரது நிலை என்ன? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இல்லை. நன்றாக உள்ளார்.

உலகியல் கல்வி எதுவும் கற்கவில்லை. மார்க்கக் கல்வியும் கூட ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அருகில் அமர்ந்து சொற்பொழிவுகளை கேட்டதுடன் சரி.

இதுவே வெளிப்படையான உலகியல் கல்வியும், மறைமுக ஞானமும் நிரப்பப்படுவார் என்ற முன்னறிவிப்பு நிறைவேறிய விதம்.

எனவே காஜா ஹஸன் நிஸாமி கூற்றைப் பார்க்கலாம். அவர் கூறுகிறார். மிர்ஸா மஹ்மூத் பெரும்பாலும் நோயுற்றே இருப்பார். ஆனால் அவரது நோய் அவரது செயல்பாடுகளை தடுக்க முடியவில்லை. தனது எதிரிகளுக்கு முன்னாலும் நிறைவான பணி செய்து தமது திறமையை நிரூபித்துள்ளார்கள். நிரம்ப அரசியல் அறிவும், மார்க்க அறிவும் கணிசமாக அவரிடம் இருந்தது. மூளை மற்றும் அறிவுரீதியான யுத்தத்திலும் நிபுணராக இருந்தார்.

பிறகு முன்னறிவிப்பின் வார்த்தை, இவர் அடிமைகளை விடுவிக்கக் காரணமாக இருப்பார் என்பதாகும். இதுவும் மிக உன்னதமாக நிறைவேறியது. இன்று இவர்கள் ஜிஹாதுக்கு எதிரானவர்கள்; காஷ்மீருக்கு எதிரானவர்கள் என்று நம்மைப் பற்றி கூறப்படுகிறது.

ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காஷ்மீருக்காக செய்த முயற்சிகளைச் சற்று கூறுகிறேன்.

ஆஸாதி காஷ்மீரின் வரலாற்றை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தான் ஆரம்பித்து வைத்தார்கள். ஏனெனில் All India Kashmir Committee உருவாக்கப்பட்ட போது அதன்

தலைமைப் பொறுப்பு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டது. பெரும் பெரும் முஸ்லிம் தலைவர்களான புகார் அலி கான், டாக்டர் இக்பால், காஜா ஹஸன் நியாமி, செய்யதலி போன்றவர்கள் அந்த கமிட்டியின் உறுப்பினராக இருந்தார்கள். இவர்கள் அனைவரின் ஆலோசனையின் பேரில்தான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அந்த Committee –யின் சதர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு அதன் விளைவாக காஷ்மீரின் முஸ்லிம்கள் மிக மிக சிறு சிறு உரிமைகளைக் கூட இழந்திருந்தவர்களுக்கு விடுதலை கிடைத்தது. முஸ்லிம் அச்சகம் அன்னாரின் பணிகளை ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தி பாராட்டியவாறு இவ்வாறு எழுதியது.

காஷ்மீரின் நிலைமை மிக இக்கட்டான சூழ்நிலையில் இருந்த காலத்தில் – பல்வேறு கொள்கை வித்தியாசங்கள் இருந்தபோதிலும் மிர்ஸா சாஹிபை (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை) தலைவராக தேர்ந்தெடுத்தனர். பணியின் சிரமத்தை கவனத்தில் கொண்டு மிகச் சிறப்பான தேர்வாக மிர்ஸா மஹ்மூதை தேர்ந்தெடுத்தனர். கொள்கை வேறுபாடுகளை முன்னிறுத்தி மிர்ஸா சாஹிபை (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை) அக்கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்காமல் இருந்திருந்தால் இத்திட்டம் முற்றிலும் செயலிழந்து போயிருக்கும். அந்த சமுதாயத்தின் பெரியவருக்கே இந்த பெருமை சாரும்.

அப்துல் மஜீத் சாலிஹ் சாஹிப் எழுதுகிறார். காஷ்மீரின் தொண்டர் மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் சாஹிப் மிகுந்த வசதி வாய்ப்பு மிக்கவராக இருந்தார். காஷ்மீர் பிரச்சனையில் மிகுந்த புகழுக்குரிய சேவை செய்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் வசதிவாய்ப்பு ஒன்றும் அவ்வளவு பெரியதாக இருந்ததில்லை. இருந்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்தினார்கள்.

செய்யதலி சாஹிப் என்ற லாஹுர் பத்திரிகை நிறுவுனர் ஆல் இந்தியா காஷ்மீர் கமிட்டி மெம்பராகவும் இருந்தார். அவர் எழுதுகிறார்: பெரிய தலைவராக இருந்த நிலையிலும் இக்பால் போன்றவர்களால் இந்த தலைமையை ஒருபோதும் நடத்தி இருக்க முடியாது. அக்காலத்தில் காஷ்மீரின் பிரச்சனை மிக சிக்கலாக இருந்தது. எனவே பல்வேறு கொள்கை முரண்பாடுகளுக்கு மத்தியிலும் மிர்ஸா சாஹிபை தேர்ந்தெடுத்தனர். எனவே அவர்களை தேர்ந்தெடுத்தது மிகச் சரியான தேர்வாக இருந்தது. அக்காலத்தில் மட்டும் கொள்கை வேறுபாடுகளை முன்னிறுத்தி அவர்களை தேர்ந்தெடுக்காமல் விட்டிருந்தால் இந்த திட்டமே முற்றிலும் செயலிழந்து போயிருக்கும். இந்த அருளுக்குரிய உம்மத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கும்.

இதிலிருந்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எவ்வளவு பணி செய்தார்கள் என்று தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார்கள்:

யுத்தத்திற்குப் பிறகு நிலைமை மிகவும் சிக்கலாகியது. பிறகு அந்த கமிட்டியின் செயல்களைப் பார்த்து ஆங்கிலேய அரசு தலையிட்டது. காஷ்மீருக்கு சுதந்திரம் கிடைத்தது. முஸ்லிம்களுக்கு அரசு வேலை கிடைத்தது. விவசாய நிலங்கள் கிடைத்தன. கல்வி வாய்ப்பு கிடைத்தது. காஷ்மீர்வாசிகள் பொதுக்கூட்டங்களில் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் இமாம் ஸிந்தாபாத். சதர் காஷ்மீர் கமிட்டி ஸிந்தாபாத் என்று முழக்கமிட்டனர். அஹ்மதியல்லாதவர்களும் இவ்வாறு முழக்கமிட்டனர்.

காஷ்மீரின் நிலைமை எவ்வாறிருந்தது. அன்னார் கைதிகளை விடுதலையாக்க எவ்வாறு காரணமாக இருந்தனர் என்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தாமே அறிவிக்கிறார்கள்.

ஒருமுறை காஷ்மீருக்கு சென்றிருந்தோம். அப்போது நம்மிடம் கணிசமான சாமான்கள் இருந்தன. நான் அரசு அதிகாரியிடம் ஒரு கூலி ஆள் ஏற்பாடு செய்து தரும்படி கூறினேன். அப்போது வழியில் சென்று கொண்டிருந்த ஒருவரை இங்கு வா என்று அந்த அதிகாரி அழைத்தார். சாமான்களை அவரை சுமக்கச்

செய்தார். சிறிது நேரத்திற்கு பிறகு அம்மனிதர் அய்யோ! ஆஹ்! என்று மூச்சுவிடத் தொடங்கினார். நான் (ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள்) அவரிடம் கேட்டேன். காஷ்மீரிகள் நல்ல உறுதியானவர்களல்லவா? உம்மால் இந்த சாமான்களை தூக்க முடியவில்லையா? என கேட்டேன். அதற்கு அவர், நான் இப்பகுதியில் பெரும் நிலம் வைத்திருப்பவன். வசதி படைத்தவன். கஷ்டமான பணி செய்து பழக்கப்படவில்லை. ஆனால் இந்த அரசு அதிகாரி என்னைக் கூப்பிட்டு இதனைத் தூக்கச் சொல்லும்போது என்னால் அதனை அவருக்கு எதிரில் ஒன்றும் மறுக்க இயலாது. இதுதான் அவர்களின் அப்போதைய நிலை. காஷ்மீரிலுள்ள நல்ல வசதியானவர்கள் கூட ஒரு சாதாரண அரசு அதிகாரி முன் எதுவும் பேச முடியாது.

பிறகு உலகியல் அறிவும் மார்க்கமும் நிரம்பப் பெற்றவராக விளங்குவார் என்ற முன்னறிவிப்பின்படி மற்றவர்களின் கருத்தைப் பார்க்கலாம்.

அல்லாமா நியாஸ் பதேஹ்பூரி சாஹிப் எழுதுகிறார். தஃப்ஸீரே கபீரின் மூன்றாம் தொகுதி என்னிடம் இருக்கிறது. நான் அதனை மிகவும் ஆழ்ந்து படித்து வருகிறேன். திருக்குர்ஆனைப் பற்றிய முற்றிலும் புதிய ஒரு சிந்தனையை அவர் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்) ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த தஃப்ஸீர் நான் பார்த்தவரை முற்றிலும் ஒரு புதிய தஃப்ஸீர் ஆகும். இதில் அறிவும் சான்றுகளும் மிக அழகிய முறையில் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவரது வெளி உலக ஞானம், பரந்த கண்ணோட்டம், அசாதாரண சிந்தனை, தொலைநோக்கு சான்றுகளை எடுத்து வைக்கும் பாங்கு அனைத்திற்கும் அவரது ஒவ்வொரு சொல்லும் சான்றாக விளங்குகின்றன. இவ்வளவு நாள் இதன்பக்கம் ஏன் கவனம் செலுத்தாமல் இருந்தேன் என்று வேதனைப்படுகிறேன். முன்னரே படித்திருந்தால் இதற்குள் அவரது அனைத்து தஃப்ஸீரும் படித்து முடித்திருக்கலாம். நேற்று சூரா ஹதீதின் தஃப்ஸீர் படித்தேன். ஹஸ்ரத் லூத் (அலை) அவர்கள் பற்றிய அவரது கருத்தை படித்து அதிர்ந்து விட்டேன். உடனே இந்த கடிதத்தை எழுதும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விட்டேன். **ஹாவுலாயி பனாத்தி ஹுன்ன** – எனது பெண் பிள்ளை இதோ இருக்கிறார்கள் (11:79) என்ற திருக்குர்ஆன் வசனத்திற்கு அன்னார் கொடுத்துள்ள விளக்கம் மிகச் சிறப்பானது. அதனைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. அல்லாஹ் அவருக்கு இஸ்லாத்தை விளக்கும் தகுதியை வழங்குவானாக.

இம்மக்கள் கொடுத்த விளக்கமோ ஹஸ்ரத் லூத் (அலை) அவர்கள் மீது பழிசுமத்துவதாக இருக்கிறது – நவூதுபில்லாஹ். லூத் நபி கூறினாராம். எனது பெண் மக்கள் இதோ இருக்கிறார்கள். அவர்களை வேண்டுமானால் எடுத்து செல்லுங்கள். இந்த இளைஞர்களை தொந்தரவு செய்யாதீர்கள் என்று சொன்னதாக எழுதுகின்றனர்.

ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் அதனை விளக்கியுள்ளார்கள். அது ஒரு நீண்ட விளக்கமாகும்.

மவ்லானா அப்துல் கரீம் தர்யாபாதி எழுதுகிறார்.

குர்ஆன், குர்ஆனிய அறிவு ஆகியவற்றை உலகம் முழுவதும் பரப்புவதில் அவர் என்னென்ன முயற்சிகள், உறுதிவாய்ந்த திட்டங்கள் எடுத்துள்ளார்களோ அதனை அல்லாஹ் தொடரச் செய்வானாக. அவரது முயற்சிகளுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக.

அறிவுரீதியான முறையில் குர்ஆனுக்கு விளக்கம் அன்னார் அளித்துள்ளார்கள். அது மிகவும் நேர்த்தியானதும் உயர்ந்ததும் ஆகும்.

வெளிப்படையான உலகியல் அறிவால் அன்னார் நிரப்பப்பட்டிருப்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தாமே எழுதுகிறார்கள்.

முன்னறிவிப்பில் அவர் உலகியல் அறிவுகளை கற்பார் என்று வரவில்லை. மாறாக இறைவன் புறமிருந்து அவ்வறிவு கற்பிக்கப்படும். பிறகு அன்னார் கூறுகிறார்கள்.

இங்கு வெளிப்படையான அறிவு என்பது கணக்கு மற்றும் விஞ்ஞான அறிவாக இருக்க இயலாது. இங்கு நிரப்பப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இது இறைவன் புறமிருந்து அவ்வறிவு கற்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இறைவன் புறமிருந்து அறிவியல் கணக்கு முதலிய அறிவுகள் கற்பிக்கப்படுவதில்லை. மாறாக மார்க்கமும் குர்ஆனும் கற்பிக்கப்படுகிறது. எனவே வெளிப்படையான அறிவினால் நிரப்பப்படுவார் என்பதன் கருத்து அல்லாஹ்வின் புறமிருந்து மார்க்க, குர்ஆனிய அறிவு கற்பிக்கப்படுவார். இறைவன் அவருக்கு கற்றுக் கொடுப்பான்.

அல்லாஹ் தமக்கு எவ்வாறு கற்பித்தான் என்று அவர்கள் விளக்குகிறார்கள். தனது ஒரு கனவு பற்றி கூறுகிறார்கள். நான் ஒரு மைதானத்தில் நிற்கிறேன். கிழக்குப் பக்கமாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். வானத்திலிருந்து ஒரு மணி அடிப்பது போன்று ஒரு சப்தம் வந்தது. அதிலிருந்து பாத்திரத்தை தட்டும்போது வரும் சப்தம் போன்று 'டன் டன்' என்ற சப்தம் வந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்த சப்தம் பரந்து விரிந்தது. வானம் முழுவதும் சப்தம் பரவியது. பிறகு நான் என்ன பார்த்தேன் என்றால் அந்த சப்தம் ஓர் வடிவம் பெற்றது. பிறகு அவ்வடிவம் ஒரு Frame ஆக ஆனது. பிறகு அந்த உருவம் அசைந்தது. பிறகு அந்த உருவம் ஓர் அழகிய வடிவம் பெற்றது. என் முன்னால் முழு உருவமாக வந்து நின்றது. பிறகு அந்த உருவம் கூறியது. நான் அல்லாஹ்வின் ஒரு மலக்கு. உமக்கு சூரா பாத்திஹாவின் விளக்கத்தை கற்றுத் தருவதற்காக அல்லாஹ் என்னை உம்மிடம் அனுப்பியுள்ளான். கற்றுக் கொடுங்கள் என்று நான் கூறினேன். அவர் எந்த அளவுக்கு கற்றுத் தந்தார் எனில் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் வரை விளக்கம் அளித்தார். பிறகு கூறினார். இதுவரை வந்த முபஸ்ஸிரீன்கள் இதுவரை தான் வந்துள்ளார். ஆனால் நான் உமக்கு அதற்கு மேல் சொல்லித் தர விரும்புகிறேன். கற்றுக் கொடுங்கள் என்று நான் அவரிடம் சொன்னேன். அவர் முழு சூரா ஃபாத்திஹாவையும் கற்றுத் தந்தார்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள். இந்த முன்னறிவிப்பில் உள்ள இன்னொரு செய்தி, மறைமுக ஞானத்தால் நிரப்பப்படுவார்.

மறைமுக அறிவு என்பது இறைவனிடமிருந்து மட்டுமே கிடைக்கும் மறைமுக அறிவு. அந்த அறிவு உலகில் ஒரு சிறப்பான வேலைக்கு நிர்ணயிக்கப்படுபவருக்கு மட்டுமே அல்லாஹ் அந்த இல்மை வழங்குகிறான். அதன் மூலம் அல்லாஹ்வுடன் அவருக்குள்ள தொடர்பு வெளிப்படுவதற்காக செய்கிறான். அவர் மூலம் மக்களுடைய ஈமானை புத்துணர்ச்சி பெற்றதாக்குவதற்காக இறைவன் அதனை செய்கிறான். அதனைத் தொடர்ந்து கூறுகிறார்கள். இன்னொரு கனவைக் குறிப்பிட்டு அல்லாஹ் தனக்கு ஒரு செய்தி வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு பெரும் உலக யுத்தம் பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டது. மிகவும் நேர்த்தியான முறையில் நிறைவேறியது. இது இரண்டாவது உலக யுத்தம் பற்றியது. அன்னார் கூறுகிறார்கள். நான் ஒரு கனவில் பார்த்தேன். நான் இங்கிலாந்து சென்றுள்ளேன். இங்கிலாந்து அரசு என்னிடம் கூறுகிறது. நீங்கள் எமது நாட்டை பாதுகாத்து தாருங்கள். நான் அவர்களிடம் கூறுகிறேன். எனக்கு முதலில் ஆகாய விமானங்கள் பற்றி கணக்கை தாருங்கள். பிறகு தான் உங்கள் நாட்டை நான் பாதுகாத்துத் தரமுடியுமா முடியாதா என்று என்னால் சொல்ல முடியும். உடனே அரசு தனது யுத்த தளவாடங்களின் Map -ஐ எனக்கு காட்டுகிறது. நான் அதனை பார்த்து விட்டு கூறுகிறேன். போர் விமானங்கள் வேண்டும். போர் விமானங்கள் இருந்தால் இங்கிலாந்தின் பாதுகாப்புக்கு ஏதேனும் ஏற்பாடு செய்ய முடியும். நான் இதனை கூறியதும் பார்க்கிறேன். அமெரிக்காவிலிருந்து ஒரு தந்தி வந்துள்ளது. American Government has given 2800 Aeroplanes to British Government – அதாவது அமெரிக்க அரசு 2800 போர் விமானங்களை இங்கிலாந்து அரசுக்கு தருகிறது. இந்த காட்சிக்குப் பிறகு எனது கண் திறந்து விட்டது. இந்த கனவை சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபுக்கு கூறியிருந்தேன். சில நாட்களுக்கு பிறகு நான் மஸ்ஜிதில் இருந்தேன். எனக்கு போன் வந்தது. போனைக் கேட்ட போது அது சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபுடைய போன் என்று தெரிய வந்தது. அன்னார் என்னிடம் கேட்டார்கள். நீங்கள் பத்திரிகை பார்க்கவில்லையா? பார்க்கவில்லையே? என்ன செய்தி?

என்று நான் கேட்டேன். தங்களது கனவு நிறைவேறி விட்டது. அமெரிக்க அரசு இங்கிலாந்து அரசுக்கு 2800 போர் விமானங்கள் வழங்கியுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது.

இவ்வாறு பெல்ஜியம் அரசின் மன்னர் பற்றிய செய்தி. 1940 –ல் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் நான் எனது ஒரு கஷ்ஃப் பற்றி அறிவித்தேன். அது மூன்று நாட்களுக்குள் நிறைவேறியது. அது ஒரு கனவாகும். ஒரு மைதானம். அங்கு ஒருவர் நிற்கிறார். அவர் ஓர் அரசர் என்று கூறப்படுகிறது. எனக்கு இல்ஹாம் வருகிறது. abdicated – பதவி பறிக்கப்பட்டது.

இது நடந்த சில நாட்களில் நாட்டின் யுத்த நிலைமைகளில் இங்கிலாந்து அரசு பாதுகாக்கப்படுவதற்காக ஒரு துஆ நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் நான் கூறினேன். பெல்ஜியம் மன்னர் பதவி துறப்பார். அல்லது இன்னொருவர் மூலம் அந்நாட்டில் பெரும் ஆட்சி மாற்றம் ஏற்படும். இது நடந்து மூன்று நாட்கள் கழியவில்லை. பெல்ஜியம் அரசர் திடீரென்று பதவி இறக்கப்ட்டார். abdicated என்பதன் பொருள் Renouncement or abart அதாவது ஓர் அறிவிப்பு மூலம் அல்லது தமது பதவியை காப்பாற்ற முடியாததன் காரணத்தால் அவர் ஆட்சியை விட்டு அகற்றப்படுவார். ஜெர்மன் அரசு கூறியது. பெல்ஜியம் கவர்ன்மென்ட் எம் கையில் உள்ளது. இப்போது அவரால் அங்கு தமது பணியை ஆற்ற முடியாது. எனவே இப்போது அங்கு ஆட்சியாளர் நாம் தானே தவிர, அரசரல்ல.

இவ்வாறு இன்னும் பல லட்சம் சம்பவங்கள். தன்னைப் பற்றி பல சம்பவங்களை அவர்களே கூறியுள்ளார்கள். முன்னறிவிப்பில் வருகிறது.

இறைவனது நிழல் அவரது தலை மீது இருக்கும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இதனை அல்லாஹ் எவ்வாறு நிறைவேற்றியுள்ளான். அவனே எல்லா நிலையிலும் உதவியாளனாக இருக்கிறான். எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றினான். அப்போது எனக்கு எந்த பின்னணியும் இல்லை. ஆனால் இவ்வார்த்தைகளை எனக்காக எவ்வாறு நிறைவேற்றியுள்ளான். நான் மனித கைகளால் மரிக்கமாட்டேன் என்று என்னால் ஒருபோதும் கூற முடியாது. ஆனால் எனது வேலை எஞ்சியிருக்கும் வரை எவரும் என்னை கொல்ல முடியாது. என்னுடன் எப்போதும் அவ்வாறு நடந்து கொள்ளப்படுகிறது. என்னை கொல்ல முயற்சி செய்யப்படுகிறது. அல்லாஹ் தனது சிறப்பான அருளால் என்னைப் பாதுகாத்து வந்துள்ளான்.

**மேலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை நான் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறேன். சொற்பொழிவாற்றிக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக தேநீர் அருந்துவது என்னுடைய வழக்கம். தொண்டை சரியாக இருப்பதற்காக அவ்வாறு செய்வேன். இந்த வகையில் ஒருவர் ஒரு குவளையை எனக்காக அனுப்பினார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சொற்பொழிவாற்றியவாறு தொண்டை வறண்டு விடுகிறது. எனவே இதனை அவர்களிடம் கொடுங்கள் என்று முன்னிருந்தவரிடம் தமது கைமாற்றி மாற்றி என்னிடம் குவளையை வரச் செய்தார். இவ்வாறு அந்த குவளை மேடைக்கு வந்து சேர்ந்தது. மேடைக்கு வந்ததும் ஒருவருக்கு தற்செயலாக ஒரு சிந்தனை வந்தது. அந்த குவளையை எடுத்து சிறிது அருந்தினார். அவரது நாவு பாதிக்கப்பட்டது. அந்த குவளையில் விஷம் கலக்கப்பட்டிருந்தது. இறை நியதியின்படி நான் அதனை அருந்தியிருந்தால் கண்டிப்பாக ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். சொற்பொழிவு அக்கணமே தடைபட்டு போயிருக்கும்.

இன்னொரு சம்பவம் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு முறை பட்டான் பையன் கத்தியுடன் வந்தார். அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் அந்த பட்டானி செயலிலிருந்து என்னைக் காப்பாற்றினார். அவனை பிடித்து விட்டார்.

இதுபோன்று இன்னும் பல சம்பவங்கள் உள்ளன.

பிறகு அடிமைகளை விடுதலை செய்ய காரணமாக இருப்பார் என்ற முன்னறிவிப்பு பற்றி கூறினார்கள். ஒரு சம்பவம் இந்த முன்னறிவிப்புக்கு வலுவான சான்றாகும். ஒவ்வொருவரும் இந்த சம்பவத்தை ஆழ்ந்து சிந்தித்து பார்க்க வேண்டும். அல்லாஹ் என் மூலமாக காஷ்மீர்களின் விடுதலைக்கு வழி ஏற்படுத்தினான். காஷ்மீர்களின் எதிரிகளுக்கு தோல்வியைத் தந்தான். காஷ்மீரிகள் அடிமைத்தளையில் எந்த அளவு ஆழ்த்தப்பட்டு இருந்தார்கள் எனில் அரசினுடைய தீர்மானம் என்னவெனில் காஷ்மீரின் அனைத்து நிலங்களும் காஷ்மீர் ராஜாவுக்கு சொந்தமானவை. எனவே ராஜா விரும்பினால் எந்த இடத்திலும் யாரையும் அமர்த்தலாம்; அகற்றலாம். எனவே அவர்கள் விரும்பியதைச் செய்ய அச்சட்டம் அவர்களுக்கு அனுமதியளித்திருந்தது.

ஒரு முன்னறிவிப்பு அவர் பூமியின் எல்லை வரை பிரபல்யம் அடைவார்.

இதுவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய ஹக்கில் மிக அற்புதமான முறையில் நிறைவேறியது. உலகில் நிறைய மிஷன்கள் அவரது காலத்தில் திறக்கப்பட்டன. சிலோன், மொரீஷியஸ், மாட்ரா, ஸ்டேட்ஸ், சைனா, ஜப்பான், ரஷ்யா, ஈரான், ஈராக், ஷாம், பாலஸ்தீன், மிஸ்ர், சூடான், அபிசீனியா மேலும் United States, யுகோஸ்லோவியா ஆகிய 34, 35 நாடுகளில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் பிரச்சார நிலையங்கள் திறக்கப்பட்டன. இஸ்லாத்தின் தப்லீக் செய்யப்பட்டது.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் என் மூலம் இஸ்லாத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு என் மூலம் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தப்லீக் நடந்துள்ளது. முழு உலகிலும் நடந்து கொண்டிருக்கிறது.

எனவே இந்த முன்னறிவிப்புகள் நிறைவேறிய சில விஷயங்களை நான் கூறினேன். இந்த முன்னறிவிப்பின் மகத்துவத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும். இது வெறும் முன்னறிவிப்பல்ல. மகத்தான வானத்து அடையாளம் ஆகும். இவ்வாறு இறைவன் நமது நபி கரீம், ரவூஃபுர் ரஹீம் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக இம்முன்னறிவிப்பை கூறியுள்ளான். இந்த முன்னறிவிப்பு உண்மையில் ஓர் இறந்தவரை உயிர்ப்பிப்பதை விட நூறு மடங்கு உயர்வானதாகும். ஏனெனில் இறந்தவரை உயிர்ப்பிப்பதின் உண்மை நிலை என்னவெனில் இறைசந்நிதானத்தில் துஆ கேட்டு ஒருவரின் உயிரை திரும்பத் தருமாறு விண்ணப்பித்தல் ஆகும். ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் பரக்கத்தால் அல்லாஹ் இந்த எளியவனின் துஆவை ஏற்றுக் கொண்டு ஒரு மகனைத் தருவதாக வாக்களித்தான். அவரது புகழ் முழு உலகிலும் பரவும். எனவே இந்த அடையாளம் இறந்தவரை உயிர்ப்பிக்கும் அடையாளத்துக்கு ஒப்பானது. சிந்தித்துப் பார்த்தால் இறந்தவர்களை உயிர்ப்பிப்பதை விட நூறு மடங்கு இது பெரியது. இறந்தவரின் உயிர் துஆவைக் கொண்டு திரும்ப வருகிறது. இவ்விடத்திலும் துஆவின் மூலம் ஒரு ரூஹ் தான் கேட்கப்படுகிறது. பிறகு ரூஹ்க்கும் சாதாரண உயிருக்கும் இலட்சம் மடங்கு வித்தியாசம் உண்டு. எவர் முஸ்லிம்களிலிருந்து முர்தத் ஆகி விட்டாரோ அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அடையாளத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைவதில்லை. இதுவே இந்த முன்னறிவிப்பின் பின்னணியில் உள்ள சில சம்பவங்கள். இவற்றை நான் விளக்கியுள்ளேன். இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஆதரவாக நிறைவேறியுள்ளதை நாம் பார்த்தோம். எனவே நான் எதிர்பார்க்கிறேன். சில அறிவில்லாத அஹ்மதிகள் பல்வேறு இடங்களிலிருந்து கடிதம் கூட எழுதியிருக்கின்றனர். கேள்வி கேட்கின்றனர். நாம் ஏன் முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாட வேண்டும்? மற்ற கலீஃபாக்களின் தினத்தை ஏன் கொண்டாடுவதில்லை? முஸ்லிஹ் மவ்வூது தின முன்னறிவிப்பின் நாள் ஈமானை வலுவூட்டவும், ஓர் உறுதிமொழியை நினைவுபடுத்தவும் கொண்டாடப்படுகிறது. நமது அசல் நோக்கம் இஸ்லாத்தின் உண்மை,

நபி (ஸல்) அவர்களின் உண்மையை உலகில் நிலைநாட்டுவதுதான் என்று அவ்வாறு கேள்வி எழுப்புவோர் புரிவார்கள் என்று நம்புகிறோம். இந்த நாள் அவர்களது பிறந்த நாளோ இறந்த நாளோ அல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆவை ஒப்புக் கொண்டவாறு அவர்களின் சந்ததியிலிருந்து ஒருவரை உருவாக்கும் அடையாளத்தைக் காட்டினான். அவர் சிறப்பான தகுதிகளை கொண்டவராக இஸ்லாத்தின் உண்மையை உலகில் நிரூபித்துக் காட்டினார். ஜமாஅத்திற்கு ஒரு தெளிவான வழியை செயல்படுத்திக் காட்டினார்கள். அதில் கடந்தவாறு பின் வருபவரும் கூட முன்னேற்றத்தை முழுமைப்படுத்த இயலும். எனவே இந்த நாள் நமது பொறுப்பை நினைவூட்டியவாறு இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக நமது தகுதிகளை செலவு செய்ய வேண்டும் என்று கவனமூட்டுகிறது. மாறாக, ஒரு அடையாளம் நிறைவேறியதற்காக ஓர் மகிழ்ச்சி கொண்டாடும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அல்ல. அதற்கு நமக்கு தவ்ஃபீக் தருவானாக. இன்னொரு விஷயம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேற்று ஒரு டாக்குமென்டரிகளை பார்த்த போது ஒரு அன்சாருல்லாஹ் கிளை அமைப்பு கூறியுள்ளது. முஸ்லிம் மவ்வூது தினத்தில் நாங்கள் ஒரு பெரிய விளையாட்டு நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளது. அதில் சிறிது அறிவு நிகழ்ச்சிகள் இருக்கும். சிறு கூட்டங்கள் நடைபெறும். அன்சார்களுக்கு விளையாட்டுகளுடன் என்ன வேலை? அன்சார் தமது வாக்குறுதியின் பக்கம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வழிகாட்டிய வழியில் நடக்க முயற்சி செய்திருக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக அன்சாருல்லாஹ் கிளை அமைப்பை உருவாக்கினோர்களோ அதனை செய்ய முயற்சி செய்திருக்க வேண்டும். அதன் மூலம்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் பரப்புபவர்களாக முடியும். அன்சாருல்லாஹ் அமைப்பின் பெயரைக் கூறமாட்டேன். நான் சொன்ன விஷயங்களின்படி செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். வருங்காலத்தில் மக்கள் இது விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 20.02.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**